ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

01.05.2025

1. தேடுகின்ற மக்களுக்கு பிரணவக்குடிலில்
தேசிகனும் சரவண சோதியாக
நாடிவந்து ஆசி தந்து காட்சியாக
நன்மைகள் பெற அருள்புரிகின்றேன்

2. அருள்புரியும் அரங்கனென் குடில்
ஆறுமுகனார் ஏற்ற ஏழாம்படைவீடு
பொருள்பலமுற புண்ணிய வழிகள் பெற
பூவுலக மக்களே நாடிவாரீர் என அழைத்து

3. அழைத்துமே விசுவாசு தகர் திங்கள்
ஆற்றல்மிகு சூலவாம் குருவார அருளாசி
வேலவனை வேண்டி அரங்கன் யானும்
வினவிடுவேன் உலகோர் நலம் கருதி

4. நலம் தரும் ஞானபலம் தரும்
நம்பிக்கை வைத்து ஞானிகளின்
பலம் தரும் பூசை கலந்து வர
பாமரரும் வந்த பிறவி நோக்கம்

5. நோக்கம் அறிந்து தெளிந்து
நான் என்ற அகந்தை கடந்து
ஆக்கமுடன் உடல் உழைப்புதனை
அறம் தருமப்பணி வகை செய்து

6. செய்துமே தன்வினை கழிய
சிறப்பான வழி சைவநெறியே என
அய்யமற அரங்கன் என் மார்க்கம்
அடைந்து உலகோர் தேறுவர்

7. தேறவே இனியும் பிறவழிதனை
தேடியலையா பிரணவக் குடிலின்
அறப்பணி தருமப் பணிகள் வகை
அபயம் அபயமென தஞ்சமடைய

8. அடையவே உங்களை எல்லாம்
அரங்கன் யான் காத்தருள்வேன்
தடையற அன்னதான சேவை வழி
தக்க பொருளுதவி செய்து ஆசிபெற

9. ஆசிபெற அவர்களின் கரங்களில்
அரங்கனென் தரும பலம் தானும்
ஆசிபெற ஆற்றலாக மாறியே
அருள்பலம் அளவிலா பொருள்பலமும்

10. பலமுமாகத் தேறி உலகில் சிறந்த
பண்பும் பரிபக்குவமும் நிறைந்த
பலம் கொண்டவர்களாக மாறி
பாரினில் அரங்கன் தேற்றிய

11. தேற்றியே ஞானப்படைகளாக
தேசமெங்கும் தொண்டர்களாக
ஆற்றல்பட பெருகி உலகமாற்றம்
அரங்கன் என் தயவுபட புரிவீர்
அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி